Registered as a Newspaper in Ceylon

விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா — இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | [illegible]-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஆனி 16 ஆம் நாள் லபர் 18 (29-6-64) திங்கட்கிழமை இதழ் 141

# சமஷ்டி கொள்கைமீது திரும்பவும் போட்டி

## அநீதியை உலகறியச் செய்யவே பதவி துறக்கும் முடிவு

### திரு. செல்வநாயகம் விளக்கம்

நல்லூர், திங்கள்

"தமிழ் எம். பி.கள் ராஜினுமா செய்வதனைத் தொடர்ந்து நடைபெறும் இடைத் தேர்தல்களில் தமிழரசுக்கட்சி அபேட்சகர்கள் சமஷ்டிக் கொள்கையை முன்வைத்தே தேர்தலுக்குநிற்பர்" என்று தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் நமது நிருபருக்களித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

கட்சியின் அடிப்படைக் கொள்கையை மாற்றக் கட்சியின் செயற்குழுவுக்கு அதிகாரமில்லையென்றும், பொதுச் சபையே கொள்கை மாற்றத்தைச் செய்யவேண்டுமென்றும் திரு. செல்வநாயகம் மேலும் தெரிவித்தார். பொதுச் சபை கொள்கையை மாற்றுதவரைக்கும் சமஷ்டிக் கொள்கையை முன்வைத்தே தமிழரசு அபேட்சகர்கள் போட்டிக்கு நிற்பரென்றும் அவர் கூறினர்.

இலங்கையிலுள்ள தமிழ் பேசும்மக்கள் எவ்வளவுதூரம் பாரபட்சமாகநடத்தப்படுகிறார்கள்என்பதனை உலகறியச்செய்யவே தமிழ் எம். பி.க்கள் ராஜினுமா செய்யவேண்டும். தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கட்டாய ஓய்வு உத்தரவுகள், தமிழ்ப்பகுதிகளுக்கு சிங்கள ஆசிரியர் நியமனம் என்பனவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக ராஜினுமா செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாக திரு. செல்வநாயகம் மேலும் கூறினர்.

ராஜினுமா யோசனை பற்றி திரு. செல்வநாயகத்திடம் நமது நிருபர் கேட்டபோது அவர் கூறியதாவது:

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு 2000 சிங்கள ஆசிரியர்கள் நியமனம்பெறவிருக்கிறார்கள். இதனை நாம எதிர்க்காதவிடத்தில் 5 வருடங்களில் தமிழ்மக்கள் சிங்களமக்களாகிவிடக்கூடிய சூழ்நிலை ஏற்படும். தோட்டப் பிள்ளைகளுக்குச் சிங்களம் போதனுமொழி என்று கல்வி வெள்ளையறிக்கை தெரிவிக்கின்றது.

நாம் நமது எதிர்ப்பைத் தெரிவிக்கவே ராஜினுமா செய்கின்றோம். அரசாங்கம் நமது செயலையிட்டுப் பயப்படாமல் இருந்தால் இருக்கட்டும். நாம் நமது எதிர்ப்பைத் தெரிவித்தே தீருவோம். மக்களுக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதிகளை இனிமேலும் பொறுத்துக்கொள்ள முடியாது.

## "ராஜினுமா இப்பொழுது அவசியமில்லை"

### உடுப்பிட்டி எம். பி. கருத்து

நல்லூர், திங்கள்

தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளை ராஜினுமாச் செய்ய வேண்டுமென்ற தமிழரசுக்கட்சியின் யோசனை காலம் கடந்த பின்னர் செய்யப்பட்ட முடிவு என்றும் ராஜினுமா யோசனையை சிறிது காலம் பின்போடுவது நன்றெனவும் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

உடுப்பிட்டி எம். பி. திரு சிவசிதம்பரத்திடம் ராஜினுமா யோசனைபற்றி அவரின் அபிப்பிராயம் கேட்கப்பட்டபோதே இக்கருத்தை வெளியிட்டார்.

கடந்த டிசம்பரில் ராஜினுமா யோசனை பற்றி ஏனைய தமிழ் எம். பி.க்களிடம் தெரிவித்த போது அது அரசியல் தந்திரம் என்று எள்ளி நகையாடப்பட்டதாகவும் திரு. சிவசிதம்பரம் கூறினர்.

கூட்டரசாங்கம் ஏற்பட்டு அரசாங்கத்தில் இப்போது பலம் ஏற்பட்டுள்ளதனுல் அரசாங்கம் தமிழ் எம். பி.க்களின் ராஜினுமாவையிட்டுக் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. கூட்டரசாங்கம் மொழிப் பிரச்னைக்குத் தீர்வுகாண முயற்சி எடுக்கிறதா என்பதனைப் பார்த்தே மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம் என்றும் திரு சிவசிதம்பரம் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

## சுவாமி சுப்பிரமணியானந்தா மகாசமாதியானுர்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் திவ்ய ஜீவன சங்க உபபோஷகரான சுவாமி சுப்பிரமணியானந்தா சென்ற சனிக்கிழமை அதிகாலையில் மகாசமாதியானுர். அவருக்கு வயது 71. அவரது பூர்வாசிரமப் பெயர் கே. எஸ். எம். சுப்பையா. இலங்கை ரயில்வேயில் இருந்து ஓய்வுபெற்றவர்.

ரிஷி கேசத்தில் ஒருவருட காலம் தங்கியிருந்து, சுவாமி சிவானந்தரிடம் சந்நியாசம் பெற்று திரும்பி, இங்கு திவ்விய ஜீவன சங்கத்தின் மூலம்

(6-ம் பக்கம் பார்க்க)

## பஸ் நிலையம் இன்று இடமாற்றம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண நகர பஸ் நிலையம் இன்று இடமாற்றம் செய்யப்படும். கஸ்தூரியார் வீதி-ஆஸ்பத்திரி வீதி சந்திப்பில் மின்சார நிலைய வீதிக்கு இடையேயுள்ள பழைய பஸ் நிலையமே இன்று தொடக்கம் பழையபடி பஸ் நிலையமாக மாறுகிறது. ஆனல் மீன் மார்க்கெட்டுக்கும் முன்புறமுள்ள வெளியும் பஸ்நிலையத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால் பழைய பஸ் நிலையத்தை விட இது சிறிது விஸ்தீரணமுள்ளதாக அமைந்துள்ளது. மீன்மார்க்கெட்டுக்கும் பஸ் நிலையத்துக்குமிடையில் உள்ள கால்வாய் மீது பஸ் போகக் கூடிய முறையில் பாலம் போடப்பட்டுள்ளது.

## யாழ். மேயர் நாளை ராஜினுமா செய்வார்?

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண மேயர் திரு. தா. ச. துரைராசா இன்னும் இரண்டொரு தினங்களில் தமது பதவியிலிருந்து ராஜினுமாச் செய்வாரென நம்பப்படுகிறது. மாநகரசபையில் தமிழ்அரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் அங்கத்தவர்களைக் கொண்ட பெரும்பான்மைக் குழுவினர் ஆறு மாதங்களுக்கு முன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி இம்மாத முடிவில் திரு துரைராசா மேயர் பதவியை ராஜினுமாச் செய்தாகவேண்டும்.

பெரும்பான்மைக் கோஷ்டியைச் சேர்ந்த அங்கத்தவர் ஒருவர் கொழும்புக்குச் சென்றிருப்பதால் அவர் நாளை திரும்பியதும் பெரும்பான்மைக் குழுவின் கூட்டம் நடைபெறும் என்றும் அக் கூட்டத்தின் முடிவில் திரு. துரைராசா தமது ராஜினுமாவைச் சமர்ப்பிப்பாரென்றும் தெரிய வருகிறது.

தமிழ்காங்கிரஸ், தமிழரசு ஒப்பந்தத்தின் பிரகாரம் திரு. எஸ். வி. மகாதேவா புதிய மேயராக அடுத்த ஒன்றரை வருடங்களுக்கு கடமையாற்ற வேண்டும்.

## 'பாரத தலைவர்களின் வழியைப் பின்பற்றுவோம்'

### இலங்கை-இந்திய நட்புறவுச் சங்க விருந்துவைபவத்தில் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

"மகாத்மாகாந்தி, ஜவகர்லால் நேரு போன்றவர்களைப் போல் மனவுறுதியுடன் எமது இனமும் நடவடிக்கைகள் எடுக்குமாயின் வெற்றி நமதே" என்று உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. பி. கே. கப்பூருக்கு இலங்கை இந்திய நட்புறவுச் சங்கத்தினுல் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அளிக்கப்பட்ட விருந்து வைபவத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

இவ் வைபவத்திற்கு இலங்கை—இந்திய நட்புறவுச் சங்கத்தலைவர் திரு. எஸ். ஹன்டி பேரின்பநாயகம் தலைமைவகித்தார்.

திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசியபொழுது, நீதியே பலத்தைக் கொடுப்பதென்பதைப் பண்டுதொட்டு கைக்கொண்டுவந்த இந்தியாவின் கலாச்சாரம் 5000 வருடங்களுக்கு முந்தியதாகுமென்றும் இந்திய கலாச்சாரம் வளர்ச்சியடைந்ததற்கு நியாயம் இந்திய தேசிய ஆட்சி நீதிவழியிலேயே நடைபெற்று வந்ததென்றும் குறிப்பிட்டார். இந்தியா எமக்கு அப் பாடத்

(6-ம் பக்கம் பார்க்க)

## "சாஸ்திரி குணமடைகிருர்: எனினும் பூரணஓய்வுதேவை"

### டாக்டர்கள் வற்புறுத்து

புதுடில்லி, ஜூன் 28

அதிக வேலை காரணமாக சுகவீனமுற்ற இந்தியப் பிரதம மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரியின் உடல்நிலை சீரான முறையில் அபிவிருத்தியடைந்துவருவதாகக் கூறப்படுகிறது. நேற்று அவர் நன்கு உறங்கினுர் என்றும், இன்று காலை மிக உற்சாகமாய்க் காணப்பட்டார் என்றும் டாக்டர்கள் திருப்தி தெரிவித்தனர் எனினும் பிரதம மந்திரிக்கு முழு ஓய்வு அவசியமென்றும், எவரையும் பேட்டி காணக்கூடாது என்றும் வற்புறுத்திக் கூறியிருக்கின்றனர்.

இன்று காலை உள்நாட்டு மந்திரி திரு. நந்தா, திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி, திரு. மொரார்ஜி தேசாய், டாக்டர் சுசிலாநய்யார், திரு. ஜி. எம். சாதிக், திரு. ஹூக்கும்சிங் ஆகியோர் பிரதமமந்திரியைச் சென்று பார்த்தனர்.

லண்டனில் நடைபெறவிருக்கும் சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாட்டுக்கு திரு. சாஸ்திரி செல்வாரென தாம் இன்னமும் எதிர்பார்ப்பதாக திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி பத்திரிகை நிருபர் ஒருவரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

மனந் திரும்புங்கள்; உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும். எழுந்திருங்கள்; நடவுங்கள்.
— மத்தேயு


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு
ஆனி 16 உ (29-6-64)


## பொலிஸாரும் பொதுஜன ஒத்துழைப்பும்

பயங்கர ஆயுதங்களுடன் கொள்ளைக் கோஷ்டியொன்றை யாழ்ப்பாணம் பொலிசார் சில தினங்களுக்குமுன் கைதுசெய்துள்ளது பொதுமக்களுக்கு சற்றே ஆறுதலளிக்கும். இச் செயல்மூலம் பொலிசாரும் பொதுமக்களின் நம்பிக்கையைப் பெறக் கூடியதாகவிருக்கும்.

சமீபகாலமாக நாட்டில் கொலை, கொள்ளை மற்றும் குற்றச் சம்பவங்கள் பெருகி வந்துள்ளன. குற்றச்செயல்கள் பெருகிவருவதற்கு வேலையில்லாத் திண்டாட்டம், வாழ்க்கைச் செலவு உயர்வு, மதுபானம், கடவுள் நம்பிக்கைக் குறைவு ஆகியவைகள்தான் காரணமென்று பலரும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். இதில் உண்மையிருப்பினும் பொலிசார் பலசமயங்களில் குற்றச் செயல்களைத் தடுப்பதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கத் தவறியதே முக்கிய காரணமெனக் கருத இடமுண்டு. குற்றச் செயல்களைத் தடுப்பதற்கும், குற்றவாளிகளைக் கண்டுபிடித்து விசாரணை செய்து தண்டிப்பதற்கும் இந்நாட்டில் சட்டங்களிருப்பினும் சட்டத்தை அமுல் நடத்துபவர்களும் சட்டத்தைப் பாதுகாப்பவர்களும் சரியான முறையில் நடந்து கொண்டாலே சட்டமும், ஒழுங்கும், நீதியும் நிலைநாட்டப்படும். இங்கு சமீபகாலத்தில் பல பெரிய கொள்ளைகளும்கொலைச் சம்பவங்களும் நடைபெற்றுள்ளபோதிலும் ஒருசில சம்பவங்களே கண்டுபிடிக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

குற்றச் செயல்கள் கண்டுபிடிக்கப்படாமல் போவதற்கு இலங்கைப் பொலிசாரின் திறமையைக் குறைத்து மதிப்பிட முடியாது. இதர நாடுகள் பலவற்றுடன் ஒப்பிடுகையில் நமது நாட்டுப் பொலிசார் சிறந்த பயிற்சியும் துணிச்சலும் தன்னம்பிக்கையுமுடையவர்கள் என்பதை அவர்களின் சிலநடவடிக்கைகள் எடுத்துக் காட்டியிருக்கின்றன. இலங்கைப் பொலிசாருக்கு வசதிக்குறைவுகள் பலவும் இருக்கின்றன. பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் தமது நிர்வாக அறிக்கையில் பொலிசாரின் குறைந்த சம்பளத்தைப்பற்றியும் இருப்பிட வசதிக்குறைவுபற்றியும் குறிப்பிட்டிருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை. என்றாலும் பொலிசார் தமது கடமையைச் சரிவர, திறமையுடன் செய்வதற்கு வேண்டிய பொதுமக்களின் ஒத்துழைப்பை அவர்கள் பெறத் தவறிவிடுகிறார்கள்.

பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு அவர்களுக்குப்பணம் தேவையில்லை. பொலிஸ் சேவையிலுள்ள சிலர் பொதுமக்களுடன் மோசமான முறையில் நடந்துகொள்வதால் பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பெறமுடியாததுடன் அவர்களது அதிருப்தியையும் தேடிக்கொண்டுள்ளனர். குற்றம்செய்தவர்கள் தப்பிக்கொள்கிறார்கள். ஒன்றுமறியாத எளியமக்கள் பொலிஸாரின் இம்சைக்குள்ளாகிறார்கள் என்ற அபிப்பிராயம் பொதுவாக மக்கள் மத்தியில் நிலவுகிறது.

பயங்கர ஆயுதங்களுடன் பல இடங்களில் கொள்ளையில் ஈடுபட்டதாகக் கருதப்படும் கொள்ளைக் கோஷ்டியினரைக் கைதுசெய்த யாழ்ப்பாணப் பொலிஸாரைப் பாராட்டும் அதேசமயம் யாழ்ப்பாணப் பகுதியில் நிலவும் சிறு குற்றச் செயல்களையும் அவர்கள் முற்றாகத் தடுத்துவிடமுடியுமென்பதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இதற்குத் தேவையானதெல்லாம் பொதுமக்களின் ஒத்துழைப்பும், ஆதரவும்தான். பொலிஸாரின் நடவடிக்கையால் கண்ணால் கண்ட சம்பவங்களைக்கூடப் பொதுமக்கள் பொலிஸில் தெரிவிப்பதற்கு அஞ்சுகிறார்கள் என்பதும் உண்மை. அந்நியரின் ஆட்சியின்போது மக்களின் எழுச்சியையும், கிளர்ச்சியையும் அடக்குவதற்குப் பொலிஸ்படை உபயோகிக்கப்பட்டது. இப்பொழுது காலம் மாறிவிட்டது. மக்களின் பாதுகாவலர்களாகவே பொலிஸார் விளங்கவேண்டும். நட்புறவோடும், நல்லெண்ணத்தோடும் பொதுமக்களைப் பொலிஸார் அணுகினால் நிச்சயம் பொதுமக்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் அவர்களுக்குக் கிடைக்கும்.

# தமிழாசிரியர் விஷயத்தில் எம். பி. க்கள் பாராமுகம்

## ஆசிரியர் சங்கம் கவலை

நல்லூர், திங்கள்

'தமிழ்பேசும் இனத்தை ஒன்றுதிரட்டிப் போராட்டம் நடத்த முற்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ்த் தலைவர்கள் தமிழாசிரியர்கள் அங்குமிங்குமாகப் பிரிந்திருப்பதனையிட்டு தகுந்த முயற்சி செய்யாமலிருப்பது கவலைக்குரியதாகும்' என்று அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்க வடப்பிரதேசக் கிளைகளின் செயலாளர் ஆசிரியர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

வடபிரதேசக் கிளைகளின் விசேஷ நிர்வாகசபைக் கூட்டம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அடுத்தவாரம் கல்வியமைச்சின் நிரந்தரக்காரியதரிக்கு யாழ்ப்பாணத்தில் வரவேற்பளிப்பது பற்றி இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அடுத்த சனிக்கிழமை யாழ். மத்தியகல்லூரியில் இக்கூட்டம் நிகழும்.

வடப்பிரதேசக் கிளைகளின் செயலாளர் ஆசிரியர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் மேலும் சொல்லியிருப்பதாவது:

ஆசிரியர் சங்க அங்கத்தவர்கள் பல கோணங்களிலிருந்தும் தாக்குதலுக்குள்ளாகி வருகிறார்கள். பதினைந்து வருடங்களுக்குமுன் ஒழுங்கீனங்கள் தலைவிரித்தாடிக் கொண்டிருந்த நேரத்தில் ஆரம்பிக்கப்பட்ட சங்கம் இன, மொழி வளர்ச்சிக்கு தொழிற்சங்க ரீதியிலே பாடுபட்டதுடன் ஒழுங்கீனங்களை ஒழுங்காக்கி சேவை வரிசை கிரம அட்டவணை முறையான மாற்றத்திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்தியது.

ஆனால் இன்று முறையான மாற்றத்திட்டம் இல்லை. பதவி உயர்வு இல்லை. ஏழு மாகாணங்களில் பரந்து சேவை செய்யும் சிங்கள ஆசிரியர்கட்காக வகுக்கப்படும் மாற்றத் திட்டத்தில் அங்கொன்று இங்கொன்றாகப் பொறுக்கி யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள தமிழாசிரியர்களை ஆளப்பார்ப்பது விந்தையாகவே உள்ளது.

சிங்கள முஸ்லிம் பாடசாலைகளிலும் மகாவித்தியாலயங்களிலும் தலைமையாசிரியர்களைக் கலந்து மாற்ற இடம் கொடுக்கும் சட்டம் தமிழ்ப் பாடசாலைகளைப் பொறுத்த வரையில் பயன் படாமல் போய்விட்டது.

சுதந்திரம் கிடைத்த பின் சுயபாஷைகட்கு முக்கியத்துவம் கொடுத்து அதன் வழி போதனை நடைபெறும் அதே நேரத்தில்கூட மொழி வேறுபாடின்றி சம தராதரங்கட்கு சம சம்பளம் வழங்க நாம் கோராமலே அரசாங்கம் முன்வரவில்லை.

தராதரப்பத்திர ஆசிரியர்களின் சம்பள விஷயத்தில் இன்றுவரை நீதி வழங்கப்படவில்லை. சிங்களப் பிராசீன பண்டிதர்களுக்கு பட்டதாரிகளின் சம்பளம் வழங்கும் வித்தியாபகுதியினர் அதே வேலையைச் செய்கின்ற தமிழ்ப் பண்டிதர்களுக்கும், வித்துவான்களுக்கும் இவ்வுரிமையை மறுப்பது நியாயமற்றது.

எமது பிரச்னைகளுக்குத் தீர்வு காண போராட முயலும் அனைவருடனும் நாம் ஒத்துழைப்போம்.

## தற்காலிக பிரதமர்

கொழும்பு, ஞாயிறு

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வெளிநாடு சென்றிருக்கும் சமயத்தில் இலங்கையின் தற்காலிக பிரதமராக சபை முதல்வர் திரு. சி. பி. டி. சில்வா கடமையாற்றுவார்.

லண்டனில் ஆரம்பமாகும் காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்து கொள்ளும் பொருட்டு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அடுத்த மாதம் முதல் வாரத்தில் லண்டனுக்கு பயணமாவார். மகாநாடு எட்டாம் திகதி ஆரம்பமாகிறது.

பிரதமர் வெளிநாடு செல்லும் பொழுது அவருக்கு பதிலாக தற்காலிக பிரதமர் ஒருவரை நியமிக்கும் விஷயத்தில் எந்தவித பிரச்னையும் தோன்றியுள்ளதா என்று பிரதமரிடம் கேட்கப்பட்டபொழுது; அதில் எந்தவித மாற்றமும் இல்லையென்றும் வழமைபோலவே நடைபெறுகிறதென்றும் பிரதமர் கூறினர்.

## நாட்டிலும் நகரிலும்

இறைவன் தமது குழந்தைகளான மானிட மன்பதைகள் மீது வைத்த எல்லையற்ற பெருங்கருணையின் நிமித்தம் எத்தனை அற்புதங்களைச் செய்கிறார்! மழை என்பது மருந்துக்கும் கிடையாத இந்தக் கோடை காலத்தில் நாவும் குடலும் வரண்டு போயிருக்கும் சமயத்திலல்லவா குடலைக் குளிரச் செய்யும் அபூர்வமான பண்டங்களைப் படைத்திருக்கிறார்!

பனைமரத்தில் அமிர்தம் போன்ற சுவையான நுங்கைத் தந்தார்; தேவருணவு என்று சொல்லக்கூடிய தித்திக்கும் மாம்பழத்தைத் தந்தார்; தேன் சொட்டும் கொழுத்த சுளைகள் மிகுந்த பலாப்பழத்தையும் தந்தார். இவை போதாதென்று தாகத்தை சாந்திசெய்யும் வத்தகைப்பழம், வெள்ளரிக்காய், கெக்கரிக்காய் முதலியவற்றையும் அளித்திருக்கிறார். எல்லாம் இந்தவெப்ப காலத்தில், வெப்பத்தால் உண்டாகும் கடுமையான தண்ணீர் விடாயையும் வெப்ப நோய்களையும் தடுப்பதற்காக அவரால் தரப்பட்ட பெருங்கொடைகளாக அல்லவா தோன்றுகின்றன! அடைமழை பெய்யும் ஐப்பசி மாதத்தில் எங்கேயாவது நுங்கு கிடைக்கிறதா, வத்தகைப்பழம் விற்கிறதா? கிடையாது.

தமிழர் உலகத்தில் தோன்றிய காலந்தொட்டே அவர்களோடு உடன் பிறந்தவைகள் போலிருப்பன முக்கனிகள். சங்ககாலப் பாடல்களில்மாவும் பலாவும் வாழையும் முக்கிய ஸ்தானம் வகிக்கின்றன. வெளியூர்களிலிருந்து ஆப்பிள்களும், திராட்சைகளும், மங்குஸ்தான்களும் வரலாம். ஆனால் அவையெல்லாம் எமது முக்கனிகளுக்கு ஈடுகாட்ட முடியாது. தனித்தனி முக்கனி பிழிந்து வடித்தொன்றாய்க் காய்ச்சிய பாகின் சுவைக்கு கடவுளின் தனிப்பெருங் கருணையையே ஒப்பிடுகிறார் தமிழ்ப் புலவர் ஒருவர்.

இந்நாட்களில் மாம்பழமும் பலாப்பழமும் வாழைப்பழமும் சந்தைகளில் மலிந்து கிடக்கின்றன. சந்தைக்குப் போகும் ஒருவர் தமக்குப் பிடித்த சாதி மாம்பழத்தையோ வாழைப்பழத்தையோ வாங்கிக் கொள்ளுகிறார். மாம்பழத்தின் உருவம், நிறம், தோலின் தடிப்பு, மணம் முதலியவற்றைப் பார்த்து இது மல்கோவா, இது செம்பாட்டான், இது அம்பலவி, இது கறுத்தக் கொழும்பான் என்று இனம் கண்டுபிடித்து விடுகிறார்கள். கிளிச்சொண்டன், மத்தளங் தூக்கி, பச்சைதின்னி, பாண்டி, புளிச்செல்வி, கற்கண்டு மா, சேலம்,—என்று எத்தனை சாதிகள் இருந்தாலும் அத்தனையையும் இனம் கண்டு பிடிக்கக்கூடிய நிபுணர்களும் இருக்கிறார்கள். இது போலவே வாழைப்பழத்திலும் கப்டல், கதலி, இதரை, மொந்தன் முதலிய இனங்களை மேற்பார்வையிலேயே இனம் அறிந்து கொள்ள முடிகிறது.

ஆனால் இந்தப் பலாப்பழம் இருக்கிறதே! வெளித்தோற்றத்தைப் பார்த்து அதன் தராதரம் எப்படிப்பட்டதென்று சொல்ல முடிகிறதா? பலாப்பழம் எல்லாமே வெறும்பலாப்பழம்தான். சாதிப் பெயர்கள் கூட இல்லை. சாதி வகுக்கப்படவில்லை. ஒரு பழத்தை வெட்டிப்பார்த்து சுவைத்த பிறகுதான் அது நல்லதோ கூடாதோ என்று சொல்ல முடிகிறது. பலாப்பழங்களில் சாதிகள் இல்லாமலில்லை.

சிலவற்றில் கூந்தலும்சக்கையும் நிறைந்திருக்கும், சிலதில் அடுக்கடுக்காய் சுளையாகவே இருக்கும். சில பழம் தேனொழுகத் தித்திக்கும், சிலபச்சைத் தண்ணீர் போலிருக்கும். சில

(4ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

வற்றின் சுளை தேங்காய்ச் சொட்டுபோல் கடிபடும், சில 'நொழுநொழு'வென்று கூளனாய் இருக்கும். இவை எல்லாவற்றையும் பலாமரம் வளர்ப்பவர்கள் இனம் இனமாகப் பிரித்து ஒவ்வொரு பெயர் வைத்துவிட்டால் சுலபமாயிருக்கும் அல்லவா? ஆனால் எப்படிச் செய்தாலும் சாதாரண மானவர்கள் வியாபாரி சொல்வதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமே ஒழிய, தாங்களாகவே பழத்தைப்பார்த்து இது இன்னசாதி என்று கிரகித்துக்கொள்வது மிகுந்த சிரமமாய்த்தானிருக்கும்.

பழத்தின் மணத்தைக் கொண்டே சிலர் அதன் தன்மையை அறிந்து விடுவார்களாம். ஆனால் இது எல்லோராலும் முடியாத காரியம். சில பலாப்பழங்கள் மரத்தின் உச்சியில் பழுத்தவுடனேயே 'நான் பழுத்துவிட்டேன்' என்று ஊரெல்லாம் பறைசாற்றும். அவ்வளவு கமகமவென்ற வாசனை வீசும். அதைவெட்டிப் பார்த்து சுவைத்த லே மணத்துக்கும் ருசிக்கும் சம்பந்தமிராது.

—'வழிப்போக்கன்,

# "தமிழினம் வாழ்வதற்கு ஆங்கில அறிவு அவசியம்"

## ஷேக்ஸ்பியர் விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு

'இன்றுள்ள இரண்டாந்தரப் பிரஜை நிலையிலிருந்து மேலும் தமிழினம் கீழ்நோக்கித் தள்ளப்படாதிருக்கவேண்டுமாயின் நாம் ஆங்கிலம் கற்கவேண்டும். அவ்வாறு ஆங்கிலத்தின் பாண்டித்தியம் பெறவேண்டுமாயின் ஷேக்ஸ்பியரின் இறவாத புகழுடைய நாடகங்களையும் விவியத்தையும் நன்றாகக் கற்க வேண்டும்.'

இவ்வாறு உரும்பராய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ஷேக்ஸ்பியர் விழாவிற் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்ட கோப்பாய் எம். பி. திரு. மு. பாலசுந்தரம் பேசுகையில் குறிப்பிட்டார். தொடர்ந்து பேசுகையில் திரு. பாலசுந்தரம் கூறியதாவது:

விஞ்ஞானிகள், நந்தையாவையும், எலியேசரையும் விஞ்ஞான உலகுக்குத் தமிழகம் அளிப்பதற்கும் ஸ்ரீநிவாச சாஸ்திரியை இலக்கிய உலகுக்கு அளிக்கவும் ஆங்கிலமே வாய்ப்பளித்தது. சோவியத் ரஷ்யா, மக்கள் சீனா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலும் இன்று ஆங்கிலக் கல்வி முக்கிய ஸ்தானத்தை வகிக்கிறது மட்டுமின்றி ஷேக்ஸ்பியருக்கு ரஷ்யா விழாவெடுக்கவும் முன்வந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றுள்ள பாடசாலைகளில் ஆங்கிலத்தின் தரம் மிகவும் குறைந்திருக்கிறது. பாடசாலைகளில் ஷேக்ஸ்பியரின் சாகாவரம்பெற்ற நாடகங்களை மாணவர் நடித்துக் காட்டுவதன் மூலமும் ஓரளவு ஆங்கிலத்தின் தரத்தை உயர்த்த முடியும்.

செல்வன் எஸ். சுந்தரலிங்கம் தலைமை வகித்தார். கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் பண்டிதர் கே. சின்னத்தம்பி, செல்வன் ஈ. கே மகாலிங்கம், என். சண்முகநாதன் ஆகியோரும் பேசினர்.

## இன்று

யாழ்ப்பாணம் பெற்றோர்சங்கத்தின் ஆதரவில் இன்று மாலை 6 மணிக்கு வைத்தீஸ்வரவித்தியாலய மண்டபத்தில் கல்வி, வெள்ளையறிக்கைபற்றி ஆராயும் பொருட்டு பொதுக் கூட்டம் ஒன்று நடைபெறுகிறது. திரு. கே. எஸ். அருள்நந்தி தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் திரு. எஸ். எச். பேரின்பநாயகம், திரு. கே. நேசையா ஆகியோரும் மற்றும் பலரும் பேசுவர்.

## சிங்களப்படம் திரையிடப்படும்

கொழும்பு, ஞாயிறு

கடந்த வாரம் முற்றாகத் தடைசெய்யப்பட்ட 'சுப சறன சப சித்' என்ற சிங்களத் திரைப்படம் சிலகாட்சிகளில் தணிக்கையுடன் திரையிடப்படும். இந்தத் திரைப்படத்தை வயது வந்தவர்கள் மட்டுமே பார்க்கலாம்.

# மணவாழ்வில் மனக்கசப்பை மாற்றும் புதிய "மருந்து"

## ஜெர்மன் ஹோட்டல் முதலாளியின் சாதனை

ரோதன்பர்க், ஜூன் 28

கணவன் - மனைவியரிடையே மனக்கசப்பு ஏற்பட்டு விவாகரத்து செய்து கொள்ளப்போகுமளவிற்கு தகராறு ஏற்படுமானல், தம்பதியரிடையே நேசஉறவை ஏற்படுத்தி மணவாழ்க்கையின் மீண்டும் ஈடுபடுத்துவதற்கான நூதன முறை ஒன்றை ஜெர்மானிய ஓட்டல் முதலாளி ஒருவர் கையாண்டு வருகிருர். இவர் தமது ஓட்டலை இந்தச் "சிகிச்சை"க்காகவே பயன்படுத்தி வருகிருர். ஏராளமான தம்பதிகள் இவரிடம் வந்து "சிகிச்சை" பெற்று சமரசமாகி மகிழ்ச்சியுடன் வீடுதிரும்பியிருக்கிருர்கள்.

நகர வாழ்க்கை அலுத்துப்போனவர்கள் நாடுமிடம் டாபர் நதிக்கரையிலுள்ள ரோதன்பர்க் நகரம். இந்த புராதன நகரிலுள்ள பழங்கால கோட்டை, கொத்தளம், சந்து, பொந்துகள் இவை எல்லாவற்றிலுமே உல்லாசப் பிரயாணிகள் ஒரு வசீகரத்தைக் காணுகிருர்கள். இந்த நகரில் சுமார் 12,000 பேரே வசிக்கின்றனர். மணவாழ்க்கையில் அலுத்துப்போன தம்பதிகளுக்கு இந்த நகர வாழ்க்கை புத்துணர்ச்சியை அளிக்கிறது. மேற்கு ஜெர்மனியிலேயே இத்தகைய வசீகரமான இடம் இது ஒன்றுதான்.

மணவாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டவர்களுக்குப் புத்துணர்வு அளிக்கும் ஸ்தாபனம் இங்கு உள்ளது. இங்கு எளிதில் யாரும் சென்றுவிட முடியாது. உல்லாசப பயண டைரக்டர் பதவியை வகிக்கும் ஷுஸ்டர் என்பவரை முதலில் பேட்டி காணவேண்டும். சலிப்பு ஏற்பட்ட தம்பதிகளை ஒன்று சேர்த்து வைக்கும் "சிகிச்சை நிலையம்" இவரால் ஏற்படுத்தப்பட்டது. ஒருவரை ஒருவர் சந்திக்க வேண்டும் என்ற ஆவலை ஏற்படுத்தி அவர்களை இணைத்து வைப்பதே இங்கு கையாளப்படும் முறை. இத்தம்பதிகள் அவரை பேட்டி கண்ட பின்பு 136 படிகள் ஏறி மேலேயுள்ள ஒரு மாடி அறைக்குச் செல்லவேண்டும். அங்குள்ள அமைதிச் சூழ்நிலை, கண்கவர் காட்சிகள், இருவர் மட்டுமே தனிமையாக இருக்கும் வசதி இவ்வளவும் வாழ்க்கையில் சலிப்புற்ற தம்பதிகளை ஒன்ருக நிச்சயம் இணைத்தே தீரும். தம்பதிகளுக்கிடையே தகராறு ஏற்பட்டால் அவர்கள் 136 படிகள் இறங்கி வந்தாக வேண்டும்.

இந்த உச்சாணி அறை, ஓட்டலின் ஒரு பாகமாக உள்ளது. தம்பதிகளிடையே ஒற்றுமை ஏற்படுத்திக் கொள்ள கையாளப்படும்முறை மனோதத்துவ வழிதான். இந்த மாதிரிச் செய்தால் என்ன என்று திடீரெனத் தோன்றியதாம். இம்முறை பரிபூரண வெற்றியை அளிப்பதாக ஷுஸ்டர் கூறுகிருர்.

இங்கு டென்னிஸ், குதிரைச் சவாரி, சறுக்கு விளையாட்டு, சித்திரம் வரைதல், உடல்பயிற்சி ஆகியவைகளுக்கான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. கணவன்மார்கள் மீன் பிடிக்கப் போகும் போது மனைவிமார்கள் சித்திரம் வரைவதில் ஈடுபடுகிருர்கள். இப்படி கணவனும் மனைவியும் பிரிந்து மீண்டும் சந்திக்கும் போது தங்கள் தங்கள் அனுபவத்தைப்பற்றி ஆர்வத்துடன் விவாதிக்கிருர்கள். இதன் மூலம் அவர்களிடையே மனக்கசப்பு மறைந்து நேசஉணர்ச்சி ஏற்படுகிறது. சிலர் நடை பழகவேண்டும். சிலர் இன்ன விளையாட்டுக்களைத்தான் விளையாட வேண்டும் என்றெல்லாம் ஷுஸ்டர் நிர்ணயிக்கிருர். சாப்பிடும்போது கணவனும் மனைவியும் கட்டாயம் ஒன்ருகச் சேர்ந்தே உணவருந்த வேண்டும் என்று அவர் கட்டாயப்படுத்துகிருர். "சேர்ந்து எப்போது சாப்பிடுகிருர்களோ அப்போது அவர்களிடையே தகராறு எதுவுமிராது" என்பது ரோதன்பர்க்கில் வழங்கி வரும் பழமொழியாகும். ரோதன்பர்க் இன்றுதான் சலிப்பு ஏற்பட்டுள்ள தம்பதிகளை சேர்த்து வைக்கிறதுஎன்பதில்லை. முன் காலத்திலேயே தம்பதிகளை சேர்த்து வைக்க சில கடினமுறைகளை இந்த நகரம் கடைப்பிடித்துள்ளது. இந்த நகரில் அன்று நீதி வழங்கிய ஸ்தலத்தை "சித்திரவதை மண்டபம்" என்றே வர்ணிப்பதுண்டு.

எந்தக்கணவனுவது அவனுடைய மனைவியினிடம் அடிபட நேர்ந்தால் அவன் வீட்டுக் கூரையை அந்நகர மக்கள் பிரித்துப்போட்டு விடுவார்கள். மனைவி தன் கணவனை அவமதித்தால் அவளைக் கழுதை மீது பின்புறமாக (அதாவது வாலைப் பார்க்க) உட்கார வைத்து நகரின் முக்கிய வீதிகளில் ஊர்வலமாக அழைத்து வருவார்கள். கணவன், மனைவி அடிப்பதை பட்டுக்கொண்டு சும்மா இருந்திருந்தால் அவன் அக்கழுதையின் கயிற்றைக் கையில் பிடித்துக்கொண்டு முன்னல் செல்லவேண்டும்.

இப்போது ஆண்களோடு பெண்கள் சரிசமமான வாழ்க்கை வாழ்வதால் இத்தகைய கடுமையான முறைகள் கைவிடப்பட்டு விட்டன. புதுமுறைகள் நல்ல பலன் அளிக்கின்றனவென்றும் தெரியவந்திருக்கின்றது. இப் புதுமுறைகளுக்கான கட்டணங்களும் ஓட்டல் கட்டணத்துடன் வசூலிக்கபடுகின்றன. நகரில் பிரிந்த தம்பதிகளும் ஒன்று சேர்ந்த தம்பதிகளும் கையில் தூரிகையுடன் காணப்படுகின்றனர்.

"ரோதன்பர்க் புத்துணர்ச்சி அளிக்கும் சிகிச்சை" இப்போது உலகப்பிரசித்திபெற்றுவிட்டது. இந்த ஸ்தாபனம் எப்படி வேலைசெய்கிறது என்பதைப் பார்க்கவே ஏராளமான பேர் வருகின்றனர்.

# டாக்டர் ஸகீர் ஹுஸெய்ன்

அல்ஜீயர்ஸ், ஜூன். 28

இந்திய உபஜனதிபதி டாக்டர் ஸகீர் ஹுஸெய்ன் அல்ஜீரியாவில் அவர் சென்ற இடங்களில் எல்லாம் உற்சாகமாக வரவேற்கப்பட்டார். ஜனதிபதி பென்பெல்லா, வெளிநாட்டுமந்திரி ஆகியோருடன் அவர் பேச்சு நடத்தினர்.

அல்ஜீரியசுதந்திரப்போராட்டத்தில் 15 லட்சம் பேர் உயிர்விட்ட கல்லறைக்குச்சென்று அவர் மலர்வளையம் வைத்தார். அல்ஜீரியா ஒருபுனிதநாடு என்றும், சுதந்திரத்திற்காக அது இரத்தம் சிந்தியிருக்கிறதென்றும் டாக்டர் ஸகீர் குறிப்பிட்ட வசனத்தை அந்நாட்டுப் பத்திரிகைகள் பிரபலமாகப் பிரசுரித்தன.

# சென்னையில் அணு மின்சார நிலையம்

சென்னை, ஜூன் 28

சென்னைக்கருகேயுள்ள கல்பாக்கத்தில் அணுசக்தி மின்சாரநிலையம் ஒன்றை அமைக்க மத்திய அரசாங்கம் ஆயத்தம் செய்து வருகிறது என தொழில் மந்திரி திரு. வெங்கட் ராமன் கூறினர்.

# மகாநதி மீது மகாபாலம்

புதுடில்லி, ஜூன் 28

ஒரிஸாவில் கட்டாக்குக்கு அருகிலுள்ள மகாநதி மீது 7000 அடி நீளமான பாலம் ஒன்று திறக்கப்பட்டது.

# மந்திரியைக் காண மகாராஜா சென்றார்

சென்னை, ஜூன் 28

சென்னை கவர்னர் ஸ்ரீஜெயசாமராஜ உடையார், ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு விஜயம்செய்து முதல் மந்திரி திரு. பக்தவத்சலத்தைச் சந்தித்தார். அவர் முதல் மந்திரியிடம் மல்லிகையும், ரோஜா மலர்களும் அடங்கிய ஒரு செண்டைக் கொடுத்தார். 15 நிமிடம் அவர் ஆஸ்பத்திரியில் இருந்தார்.

# ஸ்ரீகாஞ்சிபீடாதிபதி ஜயந்திவிழா

சென்னை, ஜூன் 28

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராச்சார்ய சுவாமிகளின் 71-வது ஜயந்திவிழா மயிலை ரஸிக ரஞ்சனிசபை ஹாலில் நடைபெற்றது. "அமரத்துவம் வாய்த்த தலைவர், உலககுரு, ஆசார்ய லக்ஷணம் பொருந்தியவர், இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை பயப்பவர்" என்றெல்லாம் பலதுறை அறிஞர்களும் அவரைப் பாராட்டிப்பேசினர். கூட்டத்திற்கு திரு. பி. டி. ராஜன் தலைமைவகித்தார்.

# பிரம்மானந்தரெட்டி தேர்வு

ஹைதராபாத், ஜூன் 28

ஆந்திரபிரதேச சட்டசபையின் காங்கிரஸ் கட்சித் தலைவராக முதன்மந்திரி திரு. பிரம்மானந்தரெட்டி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். முதன்மந்திரி திரு. சஞ்சீவி ரெட்டி டில்லி மத்தியமந்திரி சபையில் சேர்க்கப்பட்டுவிட்டதால், காலியான இந்த ஸ்தானத்திற்குத் தேர்தல் நடைபெற்றது.

# தென்வியட்னமில் கடும்சண்டை

சைகோன், ஜூன். 28

தென்வியட்னமில் அரசாங்கத் துருப்புக்களுக்கும், வியட்காங் கொரில்லாக்களுக்குமிடையே கடந்த 3 தினங்களில் நடைபெற்ற கடும்சண்டையில் 60 பேர் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்பட்டது.

2 அமெரிக்க விமானங்களும் 1 அமெரிக்கா ஹெலிகோப்டரும் கொரில்லாக்களினுல் சுட்டு வீழ்த்தப்பட்டன என்றும், 2 அமெரிக்க விமானிகள் உயிரிழந்தனர் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

# 41 சீனமாணவர் கைதாகினர்

சிங்கப்பூர், ஜூன். 28

இங்குள்ள சீன சர்வகலாசாலையை சிங்கப்பூர் பொலிசார் திடீரெனச்சோதனையிட்டு 41 மாணவர்களைக் கைதுசெய்தனர். இவர்கள் கம்யூனிஸ்ட் நடவடிக்கையிலீடுபட்டிருந்ததாய் அறிவிக்கப்பட்டது.

# அயூப். நன்றி

ராவல்பிண்டி, ஜூன். 28

பாகிஸ்தானில் ஏற்பட்ட புயலினுல் 400 பேர் மாண்டது குறித்து ஜனதிபதிராதாகிருஷ்ணன் அனுப்பிய அனுதாபச் செய்திக்கு ஜனதிபதி அயூப்கான் நன்றி தெரிவித்திருக்கிருர்.

# 165 லட்சம் டன் கோதுமை

## யு. எஸ். விடம் இந்தியா கோரிக்கை

வாஷிங்டன், ஜூன். 28

அடுத்த 4 ஆண்டுகளில் 165 லட்சம் டன் கோதுமையும், 12 லட்சம் டன் அரிசியும் 480-வது பொதுச்சட்டத்தின் கீழ் உபரியாகக் கொடுக்குமாறு அமெரிக்காவை இந்தியா கேட்டிருக்கிறது. இது கிடைக்கும் என நம்பப்படுகிறது.

# அயூப்-சாஸ்திரி சந்திப்பு: ஏற்பாடுகள் பூர்த்தி

புதுடில்லி, ஜூன் 28

அடுத்தமாத ஆரம்பத்தில் லண்டனில் காமன்வெல்த் மகாநாடு கூடும்போது இந்தியப் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரியும், பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கானும் சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுவிட்டன.

இருவரும் சந்திக்கவிருப்பது இதுவே முதல் தடவை என்றும், இந்தச் சந்திப்புக்கு மிகவும் முக்கியத்துவம் தரப்படுவதாயும், ஏனெனில் இது இந்தியா—பாகிஸ்தான் வருங்கால உறவின் போக்கைத் தீர்மானிப்பதாய் இருக்குமென்றும் கூறப்படுகிறது.

இரு நாடுகளின் தலைவர்களும் சந்தித்துப் பேசுவதற்குப் பூர்வாங்கமாக அதிகாரிகள் மகாநாடு நடைபெறப்போகிறது. அதில் கலந்துகொள்ள வெளிநாட்டுக் காரியதரிசி திரு. எம். ஜே. தேசாய் ஜூலை 4-ம்திகதி லண்டனுக்குப் புறப்படுவார்.

"பர்மாவிலிருந்து

# இவ்வாண்டுக்குள் 1 லட்சம் இந்தியர் நாடு திரும்புவர்"

சென்னை, ஜூன் 28

சுமார் ஒருலட்டம் பர்மா வாழ் இந்தியர்கள் இவ்வாண்டுக்குள் இந்தியா திரும்புவார்கள்என சென்னை அரசாங்கத்துக்குக் கிடைத்துள்ள தகவல்களிலிருந்து தெரிகிறது.

பர்மாவில் இந்திய வம்சாவளியினர் சுமார் 5 லட்சம் பிரஜைகள் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. இதில் ஏறக்குறைய பாதிப்பேர் பர்மா பிரஜா உரிமை அந்தஸ்தை ஏற்றுள்ளனர். மீதியுள்ளவர்கள் சுமார் ஒருலட்சம் பேர் ஏதாவதொரு வேலையிலீடுபட்டுள்ளனர். அவர்கள் அங்கேயே இருப்பார்கள் எனத் தெரியவருகிறது.

பர்மாவிலிருந்து வெளிவரக் காத்திருக்கும் ஒரு லட்சம் பேரில் தென்னகத்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை சரியாகத் தெரியவில்லை. சில்லறைக் கடைகளையும், மொத்த வியாபார மண்டிகளையும் பர்மா அரசாங்கம் எடுத்துக்கொண்டதை யடுத்து இந்த இடப்பெயர்ச்சி நேர்ந்துள்ளது.

# "சைப்ரஸ் அமைதியில் நம்பிக்கை இல்லை"

## ஐ. நா. மத்தியஸ்தர் கூற்று

ஸ்டாக்ஹோம், ஜூன் 28

சைப்ரஸ் தீர்வுக்கு இன்னும் அறிகுறி தென்படவில்லை என ஐ. நா. மத்தியஸ்தர் கூறினர். பின்லாந்தில் ஓய்வெடுக்கச் செல்லும் அவர், வழியில் ஸ்டாக்ஹோமில் இவ்வாறு தெரிவித்தார்.

தாம் மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டு 3 மாதங்களுக்குப் பின், இப்போது சைப்ரஸ் அமைதியில் நம்பிக்கையிழந்திருப்பதாய் அவர் தெரிவித்தார்.

வாஷிங்டனுக்குச் சென்றிருந்த துருக்கிப்பிரதமர் திரு. இன்மத்இனேனு, நியுயோர்க் வழியாக இப்போது லண்டன் வந்திருக்கிருர். லண்டனில் அவர் பிரிட்டிஷ் பிரதமரையும், இதர மந்திரிகளையும் சந்தித்து சைப்ரஸ் நிலைமை பற்றி ஆலோசனை நடத்தினர்.

இதற்கிடையில் ஜனதிபதி மக்காரியோஸ் நிக்கோஸியாவில் பேசுகையில் சைப்ரஸ் மக்களின் சம்மதமில்லாத எந்த சைப்ரஸ் தீர்வும் ஏற்கப்படமுடியாது என்று தெரிவித்தார்.

# இந்தியா-சீன போட்டி 25 ஆண்டுகள் நீடிக்கும்

## ஜெயப்பிரகாஷ் கருத்து

சென்னை, ஜூன் 28

தன் பாதுகாப்பைப் பலப்படுத்திக் கொள்வதற்காக மேலைநாடுகளிலிருந்து இந்தியா ஆயுத உதவி பெறுவது அதன் கோஷ்டிசேராக் கொள்கைய எந்தவிதத்திலும் பாதிக்காது என ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண் இங்கு ஒரு பேட்டியில் கூறினர்.

ஸ்ரீமதி பண்டாரநாயக்காவின் கேள்விக்கு நேருஜி அனுப்பிய பதிலின் விளைவாக, சீன - இந்திய எல்லைப் பிரசினைக்குத் திர்வு காண்பதற்கான ஒரு வட்டமேஜை மகாநாடு நடைபெறுவது சாத்தியமே என்ற கருத்தை ஸ்ரீ நாராயண் தெரிவித்தார்.

"இந்தியாவும், சீனவும் தத்தம் வாழ்க்கை வழிகளுக்கு ஏற்றம் தரச்செய்யும் போட்டியில் அடுத்த 25 ஆண்டுக் காலம் ஈடுபட்டிருக்கக்கூடும். எனினும் எல்லைத்தகராறுகள் போன்ற சாதாரணப் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்வது சுலபமாய் இருக்கவேண்டும்" என்றும் அவர் கூறினர்.

# நேரு பெயரில் ஆயுர்வேத ஆஸ்பத்திரி

பம்பாய், ஜூன். 28

நேருபெயரில் டில்லி அல்லது பம்பாயில் ஆயுர்வேத ஆஸ்பத்திரி ஒன்றை நிறுவ நேரு ஞாபகார்த்த கமிட்டிக்கு ரூ. 5 லட்சம் நன்கொடையளிக்க பம்பாய் லோட்டஸ்டிரஸ்ட் முன்வந்திருக்கிறது.

# "வர்த்தகர்கள் மீது பாதுகாப்புச்சட்டம்"

— சுப்ரமண்யம்

பம்பாய், ஜூன் 28

ஒவ்வொரு ராஜ்யத்திலும் உணவுப் பொருட்களின் விலைக்கு விரைவில் வரம்பு விதிக்கப்படும் என மந்திரி சுப்ரமண்யம் இங்கு நிருபர்களிடம் பேசுகையில் தெரிவித்தார். இவ்விஷயத்தில் வர்த்தகர்கள் தங்கள் போக்கை மாற்றாவிட்டால் அவர்கள்மீது இந்தியப் பாதுகாப்புச் சட்டம் பிரயோகிக்கப்படும் என்றும் சுப்ரமண்யம் எச்சரித்தார்.

# "ராஜிநாமாச் செய்வதால் பயன் கிடைத்துவிடுமா?"

## அடிப்படை உரிமைகள் முன்னணி காரியதரிசி அறிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு 19"60-ம்ஆண்டுஜூலை மாதம் நடைபெற்ற தேர்தலில் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. செல்வநாயகம் நாட்டின் பல பாகங்களுக்குச் சென்று சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வருமென்றும் தமிழரசுக்கட்சி சுதந்திரக்கட்சிக்கு ஆதரவளித்து தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை பெற்று தருமெனவும்பிரசாரம் செய்து வந்தார். இதனுலேயே தமிழ் மாகாணங்களில் தமிழ் பேசும்மக்கள் தமிழரசுக்கட்சிக்கு வாக்களித்தார்கள். ஆனல் எதிர்வரும் தேர்தலில் நிலைமை மாறுபட்டுள்ளது. எந்தச் சிங்களக்கட்சியிடமிருந்தும் தமிழரசுக்கட்சி உரிமைகளை பெற்றுக் தரமாட்டாது என்பது தெளிவாகத் தெரிந்துவிட்டது."

தமிழரசுக்கட்சி பாராளுமன்ற அங்கத்தவாகள் தங்கள் ஸ்தானங்களை ராஜினமா செய்துவிட்டு மீண்டும் தேர்தலில் நின்று மக்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்ற திருமலைத் தீர்மானம் பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கும்போது அடிப்படைஉரிமை ஜனநாயக முன்னணி காரியதரிசி திரு. ஏ. அமிர்தலிங்கம் கூறினர். மேலும் அவர் கூறியதாவது:

பாராளுமன்றத்தில் சிம்மாசனப் பிரசங்கத்தின்பின் ஐக்கியதேசியக்கட்சி தோற்கடிக்கபபட்டபின் மகாதேசாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்கத் தீர்மானித்துக் கொண்டிருக்கும்போது திரு. செல்வநாயகம் மகாதேசாதிபதியிடம் சென்று சுதந்திரக்கட்சியுடன் ஒத்துழைப்பதாக வாக்குறுதியளித்தார். பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டாமென்றும் சுதந்திரக்கட்சியை அரசாங்கம் அமைக்க அழைக்கும்படியும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார். ஆனல் இது மறுக்கப்பட்டபின் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. பண்டாரநாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்தம், ஒருசில புத்தபிக்குகளின் பிடிவாதத்தின் காரணமாக கிழித்தெறியப்பட்ட திலிருந்தே சுதந்திரக்கட்சியினரைப்பற்றி நன்கு அறிந்திருந்தும்கூட தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. செல்வநாயகம் நாடெங்கும் சென்று 60-ம் ஆண்டு ஜூலை தேர்தலில் சுதந்திரக்கடசிக்கு ஆதரவு தேடினர். கொழும்பிலும் மலைநாட்டிலும் சிலபகுதிகளுக்குச் சென்று சுதந்திரக் கடசிக்காக பிரசாரம் செய்து அங்குள்ள தமிழ்பேசும் மக்களை சுதந்திரக்கட்சிக்கு வாக்களிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். இதன்காரணமாக அப்பகுதிகளிலுள்ள சுதந்திரக் கட்சி அங்கத்தவர்கள் சொற்ப மேலதிக வாக்குகளால் ஐக்கியதேசியக்கட்சி அங்கத்தினரைத் தோற்கடித்தார்கள். சுதந்திரகட்சியினர் பெற்ற சொற்ப மேலதிக வாக்குகள் முழுவதும் தமிழ்பேசும் மக்களுடையதுதான் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதன்பின்பு தமிழரசுக்கட்சியினருக்கு என்ன நடந்தது? தமிழ்மக்களுக்கு உரிமை கிடைத்ததா?

தமிழ்பேசும் மக்கள் 60-ம் ஆண்டு தமிழரசுக்கட்சியினரை தெரிவு செய்தது எதற்காக? சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வருமென்றும் தமிழரசுக்கட்சி ஒத்துழைப்பு கொடுத்து தமிழரின் முழு உரிமைகளையும் பெற்றுத் தருவோம் என்றுமதிரு.செல்வநாயகம் கூறியபடியால்தான். 60-ம் ஆண்டு மார்ச் தேர்தல் முடிவுகளைப் போல்தான் ஜூலையிலும் சுதந்திரக்கட்சிக்கோ யு என் பி·க்கோ பூரண பெரும்பான்மை கிடைக்காது போகும். அதனல் தமிழரசுக் கட்சி அங்கத்தவர்களை அனுப்பினல்தான் உரிமைகளைப்பெற சந்தர்ப்பம் உண்டு என்று தமிழரசுக்கட்சியினர் பிரசாரம் செய்தார்கள். இதனை நம்பிய தமிழ்பேசும் மக்கள் 15 தமிழரசு எம். பி.க்களை அனுப்பினர்கள். அரசியல் தலைவர்களான திருவாளர்கள் ஜி. ஜி. பொன்னம்பலம், வி.சுந்தரலிங்கம், வி குமாரசாமி ஆகியோரை மட்டுமன்றி சமஅந்தஸ்துஎன்ற கொள்கையைக் கடைப்பிடித்து வரும் சமசமாஜக்கட்சி அங்கத்தவர்களையும் புறக்கணித்து தமிழரசுக்கட்சி அங்கத்தவர்களைத்தெரிவு செய்தார்கள்.

வவனியா மாஜி எம். பி. திரு. வி. சுந்தரலிங்கம் கையாண்ட வழியை பின்பற்றுகிறர்கள். இதனல் அவருக்கு ஏற்பட்ட முடிவே இவர்களுக்கும் ஏற்படும் என்பது திண்ணம். தமிழரசுக்கட்சி எம். பி.க்கள் ராஜினமா செய்துவிட்டு மீண்டும் தேர்தலில் போட்டியிட்டால் ஒருஸ்தானத்தைக்கூட பெறுவது கஷ்டமாயிருக்கும், சிறிலங்கா சுதந்திர கட்சியுடனே ஐக்கியதேசிய கட்சியுடனே பேச்சுவார்த்தை நடத்தி தமிழ்பேசும் மக்களின் உரிமைகளைத் தமிழரசுக்கட்சியினர் பெற்றுத்தர மாட்டார்கள் என்பது தமிழ்பேசும் மக்கள் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது.

# வடபகுதியில் நைலோன் நூற்றல் தொழிற்சாலை

## பஹாய் இயக்க பிரதிநிதி தகவல்

உடுப்பிட்டி, திங்கள் "கைத்தொழில் தான் ஒரு நாட்டின் முதுகெலும்பு. எவ்வளவுக்கெவ்வளவு தொழில் நிலையங்களும், வேலைவாய்ப்புகளும் கூடுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு நாடு சிறப்படையும். நான் ஓர் அமெரிக்கனுனலும் எனது நாட்டைப் போலவே ஏனைய சிறுநாடுகளும் தொழில்வளம் மிக்கனவாக உயரவேண்டுமென்ற ஆசையுடையவன்.

கைத்தொழில் வளம் பெருகிய நாட்டில் சகல மக்களும் சமத்துவமாக வாழமுடியும். இத்தகைய சமத்துவமான சமுதாபத்திற்காகவும், அச் சமுதாயத்தில் சமாதானத்தை ஏற்படுத்தச் செய்வதற்குமாகவே உலக பஹாய் இயக்கம் முயன்றுவருகிறது".

திரு. செ. சுவர்ணராசா தலைமையில் நெல்லியடியில் நடைபெற்ற பஹாய் இயககக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரபல அமெரிக்க இரசாயனவியல விற்பன்னர் திரு. சலோனர் சூட் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் மேசுகையில் தமிழர்கள் உழைப்பதில் முயற்சி உள்ளவர்களாதலால் வடபகுதியில் நைலோன் நூற்றல் தொழிற்சாலையொன்றை வெகுவிரைவில் நடாத்துதற்குத் தாம் திட்டமிட்டிருப்பதாகவும், யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கப்படும் மின்சாரம் அத்தொழிற்சாலைக்குப் போதாதாகையால் வடபகுதியில் எங்கேனும் தனிப்பட்ட மின்சார இயந்திரம் வைத்து இயங்கக்கூடிய முறையில் அத்தொழிற்சாலையை நிறுவ யோசிப்பதாகவும் தெரிவித்தார்.

திருமதி சலோனர் சூட் பேசுகையில், குழந்தைகள் தான் நாட்டின் எதிர்காலச் செம்மல்களென்றும், அவர்களை அன்பாக வளர்த்து நல்ல பண்புகளைப் பயிற்றுவித்தால் அதுவே நமது நாட்டிற்குச் செய்யும் பெரும் சேவையென்றும் குறிப்பிட்டார்.

யாழ். உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. கே. சிவப்பிரகாசம் பேசுகையில் ஒரு மரத்திலிருந்து பல கிளைகளும், இலைகளும் தோன்றுவதுபோலவே உலக மக்களனைவரும் ஒரே கருவிலிருந்து உதித்தவர்கள் என்றும் இவர்கள் போட்டியும், பூசலும் ஒழிந்து நல்லெண்ணத்துடனும், சமாதானத்துடனும் வாழவேண்டும் என்று கூறினர்.

திருவாளர்கள் கே. தர்மகுலரத்தினம், க. பேரம்பலம் ஆகியோரும் பேசினர்.

## "உற்சவ தத்துவம்"

உடுப்பிட்டி, ஞாயிறு "சைவ ஆலயங்களில் நடைபெறும் வருடாந்த உற்சவங்களில் முதலாம் திருவிழா தொடக்கம் கடைசி தீர்த்தம் வரை மனித வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட அடிப்படைத் தத்துவங்களையே ஒவ்வொரு உற்சவமும் விளக்குகின்றன. கோயில்வழிபாடுதான் மானிட வாழ்க்கை உயர்வதற்கு உயர்ந்த மருந்து"

'உற்சவ தத்துவம்' என்பது பற்றி கரவை தச்சன்தோப்பு விநாயகர் ஆலயத்தில் சொற்பொழிவாற்றிய அச்சுவேலி முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் மேற்கண்டவாறு கூறினர்.

## பீற்றர் கெனமன் யாழ்ப்பாணம் வருகிறர்

யாழ்ப்பாணம், ஞாயிறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. பீற்றர் கெனமன் அடுத்த மாதம் 5ம் திகதி யாழ்ப்பாணம் வருகிறர். வதிரியில் 5ம் திகதி நடைபெறவிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் 21வது வருடாந்த விழாவில் கலந்துகொள்வதற்காக இவரும் சிறந்த சிங்களப் பேச்சாளரும் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரமுகருமான திரு. திஸ்ஸ விஜயரத்னவும் வருகிறர்களென அறிவிக்கப்படுகிறது.

## வடகடாங்கா அதிபர் கொலை

அல்பர்ட்வில்லி, ஜூன் 28 வடகடாங்கா மாகாணத்தின் ஜனதிபதியும், அவரது 3 மந்திரிகளும் அல்பர்ட் வில்லி நகரத்தில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தனர் என கடாங்கா ரேடியோ அறிவித்தது.

## போக்குவரத்துக்கு ரூ. 4000 கோடி

புதுடில்லி, ஜூன் 28 4 வது ஐந்தாண்டுத் திட்டத்தில் போக்குவரத்து, தகவல் தொடர்புக்கு ரூ. 4000 கோடி செலவிடப்படுமென திட்டக் கமிஷன் உபதலைவர் திரு. அசோக்மேத்தா கூறினர்.

## "நேரு மாளிகை"

புதுடில்லி, ஜூன் 28 காலஞ்சென்ற திரு ஜவஹர்லால் நேரு கடந்த 16 ஆண்டுகளாக வசித்துவந்த டில்லியிலுள்ள பிரதமர் வாசஸ்தலம் நேருவுக்கு ஒருநினைவுச் சின்னமாக மாற்றப்படுமென, இது சம்பந்தமான ஆயத்தக்கமிட்டியில் பேசிய பிரதமர் திரு. லால்பகதூர்சாஸ்திரி கூறினர். நேருவின் வாழ்வு, நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட எல்லா விதமான பொருட்களும் இங்கு வைக்கப்படும் என்றும், அவர் கூறினர்.

திரு. நேரு எழுதிய கடிதங்கள், அவர்பற்றிய விசேஷ புகைப்படங்கள் ஆகியவற்றை வைத்திருக்கும் உள்நாட்டிலும், உலகின் இதரநாடுகளிலும் உள்ள பலரும், அவற்றை ஸ்ரீமதி இந்திரா காந்திக்கு அனுப்பிவைக்குமாறு பிரதமர் விண்ணப்பித்துக் கொண்டார்.




# ஹலிபோரேஞ்

·ஒவ்வொரு துளியிலும்

இரண்டு மூன்று தேக்கரண்டியளவு ஹலிபோரேஞ் தினமும் உங்கள் குழந்தைக்குக் கொடுத்து, திடமான எலும்புகளையும், வன்மையான பற்களையும், உறுதியான உடம்புகளையும் வளருங்கள். ஒரு வளரும் பிள்ளையின் எலும்புகள் திடம்பெற, பற்கள் வன்மையுற, உடம்பு உறுதியாகத் தேவைப்படும் அத்தனை ஜீவசத்துணவுகளையும், ஒவ்வொரு சொட்டு ஹலிபோரேஞ்சிலும் அபரிமிதமாக அடக்கப்பட்டிருக்கிறது. நீங்களுங்கூட தினமும் ஹலிபோரேஞ் பாவியுங்கள். தொற்று நோய், தடுமல் இவைகளை எதிர்க்கத் தேவைப்படும் பாதுகாப்பான ஜீவசத்துக்கள் A, D, C, இம்மூன்றும் ஹலிபோரேஞ்சிலுண்டு.




ஹலிபோரேஞ்சினுல் உங்கள் குடும்பத்தைக் களையான குதூகலமான குடும்பமாக்குங்கள்.

## ஹலிபோரேஞ்

எத்தனை நல்லது அருந்த இதுவே உங்களுக்கு நல்லது

இதொரு அலன்பரீஸ் தயாரிப்பு

AT-

வல்வெட்டித்துறை

# சிதம்பராக் கல்லூரி விளையாட்டு போட்டி முடிவுகள்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி பருத்தித்துறை மாவட்ட நீதிபதி ஜனுப் எம். எம். அப்துல் காதர் தலைமையில் நடைபெற்றது. அவர் உரைநிகழ்த்துகையில் கூறியதாவது:-

"மனிதர் ஒவ்வொருவரும் இயற்கையாகவே தேகப்பயிற்சி செய்து கொண்டு வருகின்றார்கள். அதிலும் இளம்பிள்ளைகள் இப்படியான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி வருவார்களானால் அவர்களுடைய உடல் திடகாத்திர முள்ளதாக விளங்கும். இப்படியான விளையாட்டுப் போட்டிகளுக்கு ஒவ்வொரு பெற்றோரும் தம்பிள்ளைகளை ஊக்கப் படுத்திக்கொள்ள வேண்டும் நாகரிகம் உள்ள இக்காலத்திலும் சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை இவ்வித பயிற்சியில் செல்லவிடாது தடுத்துவைத்தல் அவர்களின் அறிவீனமென்றே சொல்ல வேண்டும்."

வெற்றி பெற்றோர்களுக்கு நீதிபதி பரிசில்கள் வழங்கினர்.

## போட்டி முடிவுகள்

பாலர்பிரிவு (ஆண்கள்): 50 யார் ஓட்டம்— மோகன், நிரஞ்சனகுமார், சுந்தரகுமார்; 75 யார் ஓட்டம்— மோகன் நிரஞ்சனகுமார், சுந்தரகுமார். நீளம்பாய்தல்— கணேசன், இரத்தினகுமார், மோகன்.

கீழ்ப்பிரிவு (ஆண்கள்): 100 யார் ஓட்டம்— சிறிபகவான், மனோகரன், குமாரவேல்; 220 யார் ஓட்டம்— சிறிபகவான், குணகுலசிங்கம், குமரவேல்; நீளம் பாய்தல்— சிவநேசசுந்தரம், இந்திரலிங்கம், சாந்தகுண வடிவேல்; உயரம்பாய்தல்— ரவீந்திரன், இந்திரலிங்கம், சித்திர வடிவேல்.

மத்தியபிரிவு (ஆண்கள்): 100 யார் ஓட்டம்— இராஜேந்திரன், ஜெயபாலசிங்கம், ரவீந்திரன்; 220 யார் ஓட்டம்— சிவனருட்சுந்தரம், குருசிவம், ரவீந்திரன்; 440 யார் ஓட்டம்— ஜெயபாலசிங்கம், குமரச்செல்வம், நித்தியானந்த வேல்; நீளம்பாய்தல்— சிவனருட் சுந்தரம், தங்கவடிவேல், சந்திரலிங்கம்; உயரம்பாய்தல்— இராஜேந்திரன், தங்க வடிவேல், சந்திரலிங்கம்; காலூன்றிப் பாய்தல்— தங்க வடிவேல், இராமதாஸ், நித்தியானந்தவேல்; குண்டெறிதல்— சிவனருட்சுந்தரம், ஜெயபாலசிங்கம், சீதாராமபகவான்.

மேற்பிரிவு (ஆண்கள்): 100 யார் ஓட்டம்— குலசிகாமணி, பூரணசிங்கம்; சிவானந்தம்; 220 யார் ஓட்டம்— தவராசா, யோகச்சந்திரன், பூரணசிங்கம்; 440 யார் ஓட்டம்— ஞானச்சந்திரன், பாஸ்கரன், யோகச்சந்திரன். 880 யார் ஓட்டம்—பாலசிங்கம், சின்னத்தம்பு, மனோகரன்; 1 மைல் ஓட்டம்— பாலசிங்கம் சிவராசா, மனோகரன்; நீளம் பாய்தல்— குலசிகாமணி, சிவப்பிரகாசம், சிவானந்தம்; உயரம் பாய்தல்— கந்தசாமி ராமச்சந்தரன், யோகச்சந்திரன்; கெந்திப்பாய்தல்— சுப்பிரமணியம், குலசிகாமணி, சிவப்பிரகாசம்; காலூன்றிப்பாய்தல்—பாலசிங்கம், சுப்பிரமணியம், ராஜேந்திரன்; ஈட்டி எறிதல்— பாலச்சந்திரன், கிருஷ்ணபகவான், ராஜேந்திரன்; குண்டெறிதல்— ஞானச்சந்திரன், தவராஜ, பாஸ்கரன்; பரிதிவட்டம் எறிதல் – ஞானச்சந்திரன், பாலச்சந்திரன், சக்திவடிவேல்.

அதிமேற்பிரிவு (ஆண்கள்): 100 யார் ஓட்டம்— இராஜதுரை, வேலுப்பிள்ளை, சிவலிங்கம்; கெந்திப்பாய்தல்— தங்கராஜா, இராஜதுரை, சபாரட்ணம்; குண்டெறிதல்— இராஜதுரை, தங்கராசா, சபாரத்தினம்; தடையோட்டம்— சிவலிங்கம், சபாரத்தினம், வேலுப்பிள்ளை.

பாலர்பிரிவு பெண்கள்: 50 யார் ஓட்டம்— சரோஜினி தேவி, சாந்தினி, மங்களேஸ்வரி; தவளைப் பாய்தல்— மங்களேஸ்வரி, சரோஜினிதேவி, வதனபாஸ்கரி; எழும்பிச்சம் பழக் கரண்டி ஓட்டம்— சாந்தினி, பரிமளேஸ்வரி, இராஜலக்ஷ்மி.

கீழ்ப்பிரிவு (பெண்கள்): 75 யார் ஓட்டம்— ரூபவதனா, ரஞ்சினி, சமாலட்மனானந்தவேணி 75 யார் கயிறடித்தல்— சமாலட்மனானந்தவேணி, ரூபவதனா, சிவபாக்கியம்; நீளம்பாய்தல் — சமாலட்மனானந்தவேணி, இராதாதேவி, ரஞ்சினி; உயரப்பாய்தல் — சிவானந்தவேணி, பவானி. சுசீலாதேவி; பலன்ஸ்ஓட்டம்— இராஜேஸ்வரி, லலிதா, வனிதாமணி; தடையோட்டம் — ஜெயலட்சுமி, ஜெயலட்சுமி, கலாராணி.

மத்தியபிரிவு(பெண்கள்): 100 யார் ஓட்டம் — மீனலோசினி, பவானி, தங்கேஸ்வரி; 220 யார் ஓட்டம் — மீனலோசினி, பரமேஸ்வரி, இரத்தினமணி; 75 யார் கயிறடித்தல்— ஞானேஸ்வரி, சக்திதேவி, தங்கேஸ்வரி; உயரம் பாய்தல் — தங்கேஸ்வரி, பவானி, பரமேஸ்வரி; நீளம்பாய்தல் — சக்திதேவி, மீனலோசினி, பவானி; தடையோட்டம் — மின்னொளி தேவி, புவனேஸ்வரி, மேரி; பலன்ஸ் ஓட்டம் — மின்னொளி தேவி; ரதிகா, மலரகிர்தம்.

மேற்பிரிவு (பெண்கள்): 100 யார் ஓட்டம் — ஜெயசீலா, ராஜாமணி, பத்மினி; 220 யார் ஓட்டம் — ராஜாமணி, ஜெயசீலா, பூபதி; 75 யார் கயிறடித்தல் — பத்மினி, நாகேஸ்வரி, அன்னலட்சுமி; நீளம் பாய்தல் — இராஜலட்சுமி, பூபதி, ராஜாமணி.

### வெற்றி வீரர்கள்:

பெண்கள்:—

பாலர் பிரிவு:— சரோஜினி தேவி, சாந்தினி.

கீழ்ப்பிரிவு:—சமாலட்மனானந்தவேணி.

மத்திய பிரிவு:— மீனலோசினி.

மேற்பிரிவு:— ராஜாமணி.

ஆண்கள்:

பாலர் பிரிவு:— மோகன்.

கீழ்ப்பிரிவு:— சிறீபகவான்.

மத்திய பிரிவு:— சிவனருட் சுந்தரம்.

மேற்பிரிவு:— பாலசிங்கம், ஞானச்சந்திரன்.

அதிமேற் பிரிவு:— இராஜதுரை.

சுற்றுக்கிண்ணங்கள்:- இராசவடிவேல் சுற்றுக் கிண்ணம். (ஈட்டி எறிதல்) பாலச்சந்திரன் (மஞ்சள் இல்லம்) வல்வை புளூஸ் கழக சுற்றுக் கிண்ணம்: (880 யார் ஓட்டம்) பாலசிங்கம் (மஞ்சள் இல்லம்), தேவராஜன் சுற்றுக்கிண்ணம்:- (அஞ்சல்ஓட்டம் ஆண்கள்) ரங்கநாதன் இல்லம்) கிருஷ்ணபிள்ளை சுற்றுக் கிண்ணம்:- (அஞ்சல் ஓட்டம் பெண்கள்) ரங்கநாதன் இல்லமும் சின்னத்தம்பி இல்லமும் வேல்முருகன் சுற்றுக் கிண்ணம்:- (இவ்வருட சிறந்த விளையாட்டுவீரகர்ன்) பாலசிங்கம் (மஞ்சள் இல்லம்) ஜேனே அன்கோ சுற்றுக் கிண்ணம்: (சிறந்த இல்ல அலங்காரம்) குமரகுரு இல்லம் (பச்சை) மகேஸ்வரன் சுற்றுக்கிண்ணம்:- (முதலாவதாக வெற்றியீட்டிய இல்லம்) ரங்கநாதன் இல்லம் (சிவப்பு) புள்ளிகள் 207.

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
Robert Taylor
in
M. G. M's
GUNSof WYOMING
(East Man Colour)

மகத்தான 6-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி)
எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி
நடிக்கும்



நானும் ஒரு பெண்
கெப்பிட்டல் - பிளாஸா
மற்றும் சினிமாஸ் திரைகளில்
எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி
நடிக்கும்
தெய்வத்தின் தெய்வம்

# பச்சை இல்லம் வெற்றி

## கெருடாவில் சரஸ்வதி வித்தியாசாலை விளையாட்டுப்போட்டி முடிவுகள்

சாவகச்சேரி, ஞாயிறு

சாவகச்சேரி யாழ். கெருடாவில் சரஸ்வதி வித்தியாசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி பாடசாலை மைதானத்தில் திரு. கா. முருகேசுவின் பாடசாலைக் கொடியேற்று வைபவத்துடன் ஆரம்பிக்கப் பட்டது. பிரதம விருந்தினராக சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் கலந்து கொண்டார் விளையாட்டு முடிவில் அவர் உரைநிகழ்த்துகையில், பாடசாலையில் முதன் முதல் நடைபெறும் இப்போட்டி பெரிய மகாவித்தியாலய விளையாட்டுப் போட்டியில் எவ்வித தரக்குறைவும் இல்லாமல் சரிநிகர் சமானமாக இருக்கிறதென்றும் எதிர்காலத்தில் இவ்விடத்தில் மிகவும் உயர்ந்த பாடசாலையாக வளர இடம் உண்டெனவும் கூறினர் வெற்றி பெற்ற மாணவருக்கு சான்றிதழ் பத்திரங்களையும், இல்லங்களில் 95 புள்ளிகள் பெற்று முதலிடம்பெற்ற 'பச்சை' இல்லத்திற்கு வெள்ளிக் கிண்ணத்தையும் பரிசாக அவர் வழங்கினர்.

### விளையாட்டு முடிவுகள்!

கீழ்ப்பிரிவு: ஆண்கள் 50 யார் ஓட்டம்- மனோகரன், சுகுணேஸ்வரன், பரமேஸ்வரன்; தடை ஓட்டம்- மனோகரன், பூபாலசிங்கம், செல்வராசா; பெண்கள் 50 யார் ஓட்டம்- செல்வராணி, மனோராணி, புஷ்பராணி; 3 கால் ஓட்டம்- தங்கமணி-செல்வராணி, பரமேஸ்வரி-புஷ்பராணி, யோகலட்சுமி-மனோராணி; சம நிலை- யோகலட்சுமி, தங்கமணி, புஷ்பராணி; கணக்கு ஓட்டம்- தங்கராணி, யோகலட்சுமி.

மத்திய பிரிவு: ஆண்கள் 100 யார் ஓட்டம்- சிவராசா, தம்பிராசா, விநாயகமூர்த்தி; சாக்கு ஓட்டம்- கமலானந்தன், விநாயகமூர்த்தி, திருநாவுக்கரசு; நீளம் பாய்தல்- சிவராசா, கமலானந்தன், தம்பிராசா; பெண்கள்: 100 யார் ஓட்டம்- அம்பிகாதேவி, உமையம்மை, நாகேஸ்வரி; கயிறடித்தல்- அம்பிகாதேவி, தேவமலர், உமையம்மை; சமநிலை- அம்பிகா தேவி, உமையம்மை, நாகேஸ்வரி; தடையோட்டம்- புஷ்பராணி, அம்பிகாதேவி, நீலாம்பிகை.

மேற்பிரிவு: ஆண்கள் 220 யார் ஓட்டம்- சிவலோகநாதன், மார்க்கண்டு; குண்டெறிதல்- மார்க்கண்டு, திருநாவுக்கரசு, சிவலோகநாதன்; பெண்கள்: 100 யார் ஓட்டம்- லீலாவதி, அழகம்மா, இராசம்மா; 220 யார் ஓட்டம்-கனகம்மா. லீலாவதி, கமலாதேவி; தடையோட்டம்- சரஸ்வதி, கமலாதேவி, கனகம்மா; சமநிலை- கமலா தேவி, இராசம்மா, கனகம்மா! ஆண்கள்: அஞ்சலோட்டம்- மஞ்சள் இல்லம், பச்சை இல்லம், நீல இல்லம்; பெண்கள்: அஞ்சலோட்டம்- பச்சை இல்லம், மஞ்சள் இல்லம், நீல இல்லம்; இல்ல அலங்கரிப்பு- பச்சை. நீலம், மஞ்சள்; விநோத உடை.- பச்சை இல்லம். நீல இல்லம், மஞ்சள் இல்லம்; அணி நடை- நீல இல்லம், பச்சை இல்லம், மஞ்சள் இல்லம்; பழைய மாணவர் ஓட்டம்- கனகசபை, முருகேசு, துரைராசா.

## நாகாலாந்து

ஷில்லாங், ஜூன் 28

இப்போது தலைமறைவாய் இருக்கும் பகை நாகர்களை கலந்தபின் அவர்களுடன் சமாதானப் பேச்சுக்கு ஒரு திகதி நிர்ணயிக்கப்படும் என்றும், அரசாங்கத்தின் நிபந்தனைகளை அவர்கள் ஏற்ருல் ஒரு மாதம் ராணுவ நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

## சாஸ்திரி தேகநிலை

புதுடில்லி, ஜூன் 28

சுகவீனமடைந்த திரு. லால் பகதூர் சாஸ்திரி நேற்று நன்ருக ஓய்வெடுத்துக்கொண்டார் என்றும், அவருக்குக் காய்ச்சல் சற்றுத் தணிந்திருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### திங்கள் 29-6-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 2-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 காலைக்கதிர், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 மூவரிசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப் பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல் — டி. கங்காதரன், 7-15 பாட்டு — லிங்கம் சகோதரர்கள், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 தமிழ் மூலம் சிங்களம் (மறு ஒலி பரப்பு), 9-45 வாத்தியஇசை, 10-00 நேயர்விருப்பம்.

புன்னகை பூத்திருங்கள்!




கழுவக்கூடிய சூப்பர் குயிங்க் ரோயல் புளூ மை கொட்டுண்ட புடவைகளையும் துணிமணிகளையும் பொறுத்து கவலையே கொள்ளாதீர்கள். ஏனெனில் இந்த மை தான் பாடசாலைக்கும் வீட்டுப் பாவனைக்கும் உகந்த மை. காரணம் மை பட்ட உடைகளைக் கழுவி அலசியதும் மைக் கறைகள் மாயமாய் மறைந்து விடுகின்றன.

இது ஒரு
பார்க்கர் பேனா
கம்பனியின் உற்பத்தி
உலகினரால் அதிகமாக நாடும் பேனைகளைத் தயாரிக்கும் ஸ்தாபனத்தினது.

வரி விளம்பரம்

தேவை

நல்ல அனுபவமுள்ள பங்களா சமையற்காரர் உடனே தேவை. மேல்நாட்டு உணவுகள் தயாரிப்பதில் மிகவும் தேர்ச்சி பெற்றவராக இருத்தல் வேண்டும். குடாநாட்டு ஆள் விரும்பத்தக்கது. நேரில் சமுகமளிக்கவும். எட். ஸாப்பி லின், காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை, காங்கேசன் துறை 546

கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில்
சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஓயின்மென்ற்
சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்
தடிமன், தலையிடி, சந்துவலி போன்ற எல்லா வேதனைகளையும்தணிக்கவல்ல விசேஷ பாம்,
தயாரிப்பாளர்கள்:
GABRIELS, Chunnakam. 273

# பதவி துறப்பு முடிவுக்கு கொழும்புக் கிளை ஆதரவு

## திருமதி மேனன் வெளியிட்ட கருத்துக்குக் கண்டனம்

கொழும்பு, ஞாயிறு

சிம்மாசனப் பிரசங்க வாக்கெடுப்புக்குப் பின்னர் தமிழ் பேசும் பாராளுமன்றப் பிரதிநிதிகள் சகலரும் தங்களது பாராளுமன்ற உறுப்பு உரிமையைத் துறந்து தமிழ்பேசும் மக்களின் பூரண சுதந்திரம் பெறுவதற்கான அதிகாரத் தீர்ப்பை மக்களிடமிருந்து பெறவேண்டும் என்று கடந்த வார இறுதியில் திருக்கோணமலையில் கூடிய தமிழரசுக்கட்சியின் செயற்குழு செய்து கொண்ட முடிவை இலங்கை தமிழரசுக்கட்சியின் கொழும்புக்கிளை வரவேற்றுள்ளது.

இலங்கை தமிழரசுக்கட்சியின் கொழும்புக்கிளை நேற்று மாலை கூடியது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள் வருமாறு:

ஈழத்தமிழ் பிள்ளைகளுக்கு சிங்களத்தை பலவந்தமாகப் போதிக்கும் பொருட்டு தமிழ்ப் பகுதிகளுக்கு 2000 சிங்கள ஆசிரியர் 'படையை' அனுப்புவதென்ற அரசாங்கத்தின் முடிவை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். சிங்கள ஆசிரியர்களை தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்புவதனால் ஏற்படவிருக்கும் விளைவுகளுக்கு அரசாங்கமே பொறுப்பாகவிருக்கும் என்பதையும் நாம் அரசாங்கத்துக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

தமிழ்மக்களின் எதிர்ப்புகளுக்கு நிலைக்களனாக விளங்கும் சிங்கள 'ஸ்ரீ' பஸ்களை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்ப வேண்டாம் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறோம். இம்முயற்சி சாத்தியமாகும் பட்சத்தில் இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அரசாங்கமே பொறுப்பாகவிருக்கும்.

### திருமதி மேனன் மன்னிப்புக் கோர வேண்டும்

பிரதமரின் விருந்தினராக அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்திய வெளிநாட்டிலாகா ராஜாங்க மந்திரி திருமதி லக்ஷ்மிமேனன் 'செஞ்சோற்றுக்கடன்' தீர்க்கும் வகையில் ஈழமக்களுக்கு சிங்கள மக்களுடன் இரண்டறக் கலக்குமாறு கூறி தமிழரின் அழிவுக்கு வழிகோலி சிங்கள வகுப்புவாத வெறியைத் தூண்டியதை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன் தமிழ் மக்களின் இனஉணர்ச்சியை மதிக்காது மானக்குறைவாக தமிழ்மக்களை எடை போட்டதற்காக திருமதி லக்ஷ்மி மேனன் மன்னிப்புக் கோர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

# இராணுவத் தாக்குதல் பற்றி எஸ்.ஜே. வி.யிடம் முறையீடு

நல்லூர், திங்கள்

மயிலிட்டி, பலாலி, வல்வெட்டித்துறை, மாதகல் ஆகிய இடங்களில் இராணுவத்தினரின் நடவடிக்கை பற்றி மேலிடத்திற்கு அறிவித்து நடவடிக்கை எடுக்கும்படி அப்பகுதி மக்கள் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. செல்வநாயகத்திடம் முறையிட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் வந்திருந்த திரு. செல்வநாயகத்திடம் பொது மக்கள் தமது குறைகளைச் சுட்டிக் காட்டினர்.

சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடைசெய்ய நியமிக்கப்பட்ட இராணுவத்தினர் இப்பகுதிகளில் நடந்து கொள்ளும்முறை பொது மக்களுக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

சமீபத்தில் இராணுவத்தினர் நடந்து கொண்ட முறை பற்றி இராணுவத் தலைமை அதிகாரிக்கு தாம் அறிவித்த போது அவர் விசாரணை நடத்தி பொது மக்கள் வீணாகப் பயப்படுகிறார்கள் என்று தம்மிடம் கூறியதாகவும் திரு. செல்வநாயகம் தம்மைச் சந்திக்க வந்தவர்களிடம் தெரிவித்துள்ளார்.

மிக விரைவில் தாம் இது பற்றி தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்துவதாகத் திரு. செல்வநாயகம் உறுதியளித்திருக்கிறார்.

### மீண்டும் தாக்குதல்

பஸ்வண்டிக்காக காத்து நின்ற ஒருவரை இராணுவத்தினர் சிலர் தாக்கியதாகக் கூறப்படுகிறது. இச்சம்பவம் மாதகலில் நடைபெற்றதாகவும் சொல்லப்படுகிறது. இச்சம்பவம்பற்றி காங்கேசன்துறை எம். பி.யும் தமிழரசுக் கட்சித்தலைவருமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் முறையிடப்பட்டுள்ளது.

திரு. செ. செல்வநாயகம் என்பவர் நேற்று முன்தினம் மாதகல் துறைமுக நிலையத்திற்கு முன் பஸ்ஸுக்காகக் காத்துநின்றாராம். அப்போது அவ்வழியாக வந்த இராணுவத்தினர் சிலர் செல்வநாயகத்தை "நீதான் கள்ளத்தோணி ஏஜெண்டா" என்று கேட்டுத் துன்புறுத்தினராம்.

இச்சம்பவம் உடனடியாக திரு. செல்வநாயகம் எம். பி.யின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து மேலதிகாரிகளுக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

### சுவாமிசுப்பிரமணியானந்தா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுப்பிரார்த்தனை முதலிய சமய சேவைகளில் ஈடுபட்டுத் தொண்டாற்றி வந்தார். அவருக்கு இரு புதல்விகள். அதில் ஒருவர் சுவாமி முக்தானந்தா என்ற பெயருடன் நல்லூரில் "வைகுந்த கைலாஷ்" என்ற ஆச்சிரமம் அமைத்து தவ வாழ்க்கை நடத்துகின்றார்கள். மற்றவர் திவ்யஜீவன சங்கத்தின் காரியதரிசியாவார்.

சனிக்கிழமை முழுதும் தொடர்ந்து பிரார்த்தனை மலர் வழிபாடு நடைபெற, ஞாயிறன்று காலை தேவார, திருவாசக பஜனையுடன் செம்மணி மயானத்திலே சுவாமிஜியின் புனித உடல் தகனம் செய்யப்பெற்றது. ஆண்களும் பெண்களுமாக ஏராளமான அன்பர்கள் வந்து மரியாதை தெரிவித்தனர்.

### புதுவருட நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

புளியம்பொக்கணை மாதர் முன்னேற்ற சங்கத்தின் பொதுக்கூட்டம் சங்கத் தலைவி எம். கே. சாஸ்வதி தலைமையில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர்களாக கீழ்க்காணுவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவி: எம். கே. சரஸ்வதி, உப-தலைவி: த. இராசேஸ்வரி, செயலாளர்: க. பரமேஸ்வரி, உப-செயலாளர்: எஸ். வி. அன்னப்பிள்ளை, பொருளாளர்: எஸ். கே. சேதுநாயகி.

# நிதிமந்திரியை பட்டினசபைத் தலைவர் சந்திப்பார்

நல்லூர், திங்கள்

நிதி மந்திரி டாக்டர் என். எம். பெரேரா காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவருடன் நாளை தமது காரியாலயத்தில் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கின்றார்.

காங்கேசன்துறை பட்டினசபைக்கு மின்சார அபிவிருத்திக்கான கடன் வழங்குவது பற்றிப் பேச்சுக்கள் நடத்தவே நிதிமந்திரி பட்டினசபைத் தலைவரை அழைத்துள்ளார்.

பட்டினசபைத் தலைவர் சார்பில் உபதலைவர் திரு. சு. கிருபாமூர்த்தி செவ்வாய்க்கிழமை நிதிமந்திரியை அவரது காரியாலயத்தில் சந்திப்பார்.

பட்டினசபை அபிருத்திக்கு கடன் வழங்குவது பற்றிப் பேச்சுக்கள் நடத்தப்படும் வேளையில் பட்டினசபை காரியதரிசி நியமனம் பற்றியும் பிரஸ்தாபிக்கப்படும். பட்டினசபைக்கு ஒரு மரணவிசாரணை அதிகாரி நியமிக்கப்பட வேண்டும் என்றும் பட்டினசபை கேட்டுள்ளது.

# ரூ. 1000 பிணையில் பஸ்சாரதி அனுமதி

மாவிட்டபுரம், ஞாயிறு

சென்ற வெள்ளிக்கிழமை மயிலிட்டி காசநோயாளர் ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் பஸ்ஸினால் மோதுண்டு ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருந்த தம்பு துரைச்சாமி (52 வயது) நேற்றிரவு 9-35-க்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மரணமாகி விட்டார். துரைச்சாமியின் மரணம் குறித்து மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எச். அத்துறுபாறு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலும், விபத்து நடந்த இடத்திலும் விசாரணை நடத்தினர். காங்கேசன்துறைப் பொலிஸ் சார்ஜண்ட் திரு. முத்துக்கிருஷ்ணன் சாட்சிகளை ஆஜர் செய்தார். பஸ் கண்டக்டர் ஜயாத்துரை ரி. தம்பாப்பிள்ளை ஆகியோர் சாட்சியமளித்த பின் நீதிபதி பஸ் சாரதியான நாகலிங்கம் தில்லையம்பலத்தை 1000 ரூபா பிணையில் செல்ல உத்தரவிட்டு மேல் விசாரணையை அடுத்த மாதம் 10-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

# கோவில் உற்சவங்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

உரும்பராய்க் கற்பகபிள்ளையார் கோவிலைச் சேர்ந்த தேர்முட்டியை முன்னாள் வவனியா எம். பி. திரு. செ. சுந்தரலிங்கம் நண்பகல் திறந்துவைப்பார். இத் தேர்முட்டி 15,000 ரூபாய் செலவில் கட்டப்பட்டது.

வண்ணை ஸ்ரீ பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் மணவாளக் கோலத்திருவிழா இன்று மு. ப. 11-30 தொடக்கம் பி. ப. 1-30 வரை நடைபெறும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பி. ப. 3 மணிக்கு சுவாமி உள்வீதி சுற்றி திருவிழா முடிவடையும்.

# சுங்க இலாகாவினரின் ஜீப் புரண்டது

மாவிட்டபுரம், ஞாயிறு

வல்வெட்டித்துறை சுங்க இலாகா உத்தியோகத்தர்கள் தமது ஜீப்பில் ரோந்து சுற்றி வருகையில் முன்சில் ஒன்றில் திடீரென காற்றுப்போனமையால் தொண்டமானாற்றுச் சந்திக்கு அருகாண்மையில் ஜீப்புரண்டது ஜீப்பில் இருந்தவர்கள்சிறுகாயங்களுடன் தப்பிவிட்டனர். ஜீப் காங்கேசன்துறை பொலிஸ் பாதுகாப்பில் இருக்கிறது. இது சம்பந்தமாக காங்கேசன்துறைப் பொலிஸ சார்ஜண்ட் முத்துக்கிருஷ்ணன் விசாரணை செய்கிறார்.

# "சமுதாயப் புரட்சியின் சாதனை லஞ்சஊழலே!"

## கோப்பாய் எம். பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

"1956-ம் ஆண்டில் ஆரம்பமான சமுதாயப் புரட்சி நாட்டில் லஞ்ச ஊழல்களையே ஏற்படுத்தியிருக்கிறது. லஞ்ச ஊழல்கள் இன்னும்சகல துறைகளிலும் பரவலாகிவிட்டது வேதனைப் படவேண்டியதோர் விஷயமாகும்" என்று கோப்பாய் எம். பி. திரு. எம். பாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர்களின் ஏழாவது ஆண்டு விருந்து வைபவத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில்தான் திரு. பாலசுந்தரம் மேற்கண்டவாறு கூறினர்

கல்வி வெள்ளை அறிக்கை பற்றி அவர் பேசுகையில்; வெள்ளை அறிக்கையினால் சிறுபான்மை சமூகத்தினர் வெகுவாகப் பாதிக்கப்படுவார்கள் என்று கூறினர்.

விருந்து வைபவத்துக்கு தலைமை வகித்த அதிபர் திரு. வி. கே. கந்தசுவாமி பேசுகையில் கொக்குவில் இந்துக் கல்லூரி போன்ற பாடசாலைகள் கல்விசம்பந்தமான வெள்ளை அறிக்கையினால் பாதிக்கப்படுமென்ற குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட விஞ்ஞானி டாக்டர் கே. கந்தையா ஆங்கிலத்தின் அவசியம்பற்றி வற்புறுத்தியிருந்தார். ஆங்கிலத்தை கற்பதன் மூலம் நவீன அறிவைப் பெற வாய்ப்பு ஏற்படுகிறதென்றும் ஐரோப்பாவிலும் இதை உணர்ந்து ஆங்கிலத்துக்கு முக்கிய இடத்தை அளித்திருக்கிறார்கள் என்றும் இதையே நாமும் பின்பற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

திரு. எம். வி. தியாகராஜா, திரு. எஸ். பி. நடராசா, யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. என். சிவஞானசுந்தரம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

# பாரத தலைவர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தைக் கற்றுக்கொடுத்துள்ளதென்றும் இந்தியா இலங்கை உறவின் அடிப்படையில் கலாச்சாரமும், சமயமும், பாஷையும் உள்ளனவென்றும் குறிப்பிட்டார்.

மாவட்ட நீதிபதி திரு. என். சிவஞானசுந்தரம் பேசியபொழுது இலங்கை—இந்திய உறவின் காலம் நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு நீடித்து வந்துள்ளதென்றும், அந்நிய ஆட்சியின்கீழ் இந்தியா இருந்த பொழுதிலும் மனிதாபிமான உணர்ச்சி பொருந்திய இந்தியத் தலைவர்களின் தரிசனம் எமக்குக் கிடைத்ததால் அடிமை நாடாகவிருந்தபொழுதே சுதந்திரமக்களைப் போன்ற உணர்ச்சியுடன் முன்னேற வழி வகுக்கக்கூடியதாயிருந்ததென்றும் குறிப்பிட்டார்.

இலங்கை—இந்திய நட்புறவுச் சங்கம இந்தியா—யாழ்ப்பாணம் நட்புறவுச் சங்கமாக இயங்காது அகில இலங்கைக்கும் உரியதாக ஒற்றுமைப் பாதையில் செல்லவேண்டுமென்றும் திரு. சிவஞானசுந்தரம் குறிப்பிட்டார்.

இந்திய ஹைகமிஷனர் திரு. கபூர் தமது உரையில் கூறியதாவது:

இலங்கை—இந்திய நட்புறவுச்சங்கம் வளர்ச்சியுறச் சிறந்த ஏதுக்கள் உண்டு. அது ஒரு அடையாளமாக இருக்காது இருநாட்டு மக்களும் நட்புறவுடன் முன்னேறிக் கொண்டுபோக இச் சங்கம் தம்மாலியன்றளவிற்கு முயலவேண்டும். யாழ்ப்பாணத்தில் எனக்குக் கிடைத்த சிறந்த வரவேற்புப்போன்று அகில இலங்கையிலும் கிடைத்துவந்துள்ளது. இது எமது நாட்டுக்குக் கொடுத்த மதிப்பெனவே நான் கருதுகிறேன்.

வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி மபெல் தம்பையா, முன்னாள் செனட்டர் திரு. எஸ். ஆர். கனகநாயகம், இந்தியத் தூதுவராலய முதற் காரியதரிசி திரு. ராஜ்குமார் ஆகியோரும் பேசினர்.

பம்பாயில்

# போதனாசிரியர் பயிற்சி

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

நல்லூர், திங்கள்

கொழும்புத்திட்ட தொழில்நுட்பக் கூட்டுறவுத் திட்டத்தின் கீழ் பம்பாயில் போதனாசிரியர்களாகப் பயிற்சி பெறுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பொருத்துதல், பற்றவைத்தல், மோட்டார்இயந்திரத்தொழில்தகட்டு லோகவேலை, இயந்திரவேலை, மின்கம்பி வேலை, அச்சிவிடல், மாதிரி உருத் தயாரித்தல் ஆகியவற்றில் ஏதாவதொன்றில் செயன்முறை அனுபவமும் உடையவர்கள் போதனாசிரியர்களாகப் பயிற்சி பெற விண்ணப்பிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்பது மாத காலத்திற்கு பம்பாய் மத்திய போதனாசிரியர் பயிற்சிக் கழகத்தில் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி வகுப்புகள் அடுத்த ஆண்டு முற்பகுதியில் ஆரம்பிக்கப்படும்.

டிப்ளோமா பத்திரமுடையவர்கள் அல்லது மேற்பார்வையாளராகவோ, போதனாசிரியராகவோ வேலைபார்ப்போர் விரும்பித் சேர்க்கப்படுவர் என்று தொழில் அதிபர் திரு. கெ. வி. அபேவீரா தெரிவித்துள்ளார். அடுத்த மாதம் 11-ம் திகதி வரை போதனாசிரியர் பயிற்சிக்கான விண்ணப்பங்களை அனுப்பலாம்.

# ரூ. 100 அபராதம்

ஊர்காவற்றுறை, சனி

வேலணை மேற்கு வாசியான சின்னத்தம்பி ஐயம்பிள்ளை என்பவரை அதே ஊரைச் சேர்ந்த செல்லத்தம்பி சுந்தரலிங்கம் என்பவர் அடித்துக் காயப் படுத்தியதாகக் குற்றம் சாட்டித்தொடரப்பட்டவழக்கு ஊர்காவற்றுறை நீதிபதி திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக்கண்டு 100 ரூபா அபராதமும் கோடு கலையும் வரையும் மறியலும் விதித்துத் தீர்ப்புக் கூறினர்.

# சாரதிக்கு அபராதம்

ஊர்காவற்றுறை, சனி

ஊர்காவற்றுறை - கருவிலைச் சேர்ந்த கார் சாரதி மாரிமுத்தி சோமசுந்தரம் என்பவர் ஊர்காவற்றுறை பொலிஸ் இலாகாவைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் கட்டளையை மீறி நடந்தாரெனக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. அரசுவால்டன் எதிரிக்கு ரூபா 50 அபராதம்விதித்தார். "பொலிஸ் உத்தியோகத்தர் உமது காரை மறித்தபோது நீர் அதைக்கவனியாது அலட்சியமாகக் காரை ஓட்டிச்சென்றமை குற்றமாகும்" என்று நீதிபதி எதிரியைப் பார்த்துக்குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனதாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.